# இலங்கை துறைமுக அதிகார சபை

# பதவி வெற்றிடங்கள்

## இலங்கை துறைமுக அதிகார சபையில் கீழ் குறிப்பிடப்படும் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

| **பதவி, சேவை வகை** | **தகைமைகள்** | **ஏனைய கட்டாய தேவைப்பாடுகள்** | **சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் சம்பளத் திட்டம்** | **குறிப்பு** | **வயதெல்லை** |
|---|---|---|---|---|---|
| உதவி பிரதான சாரதி (சேறுவாரிக் கலம்)<br><br>சேவை வகை தொழில்நுட்பம் 7 : 3 (T3) | க.பொ.த(சா.தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் மொழி **மற்றும்** கணிதம் உட்பட்டதாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>**மற்றும்**<br><br>1907 லான்ஸி கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கை வர்த்தக கப்பற் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும் குதிரை வலு 1000 (750 KW) இற்கு குறையாத கொள்ளளவினையுடைய சான்றிதழ்.<br>**மற்றும்**<br>இயந்திர அல்லது கடலக துறைக்கான தேசிய தொழிநுட்ப சான்றிதழ் (NCT)<br>**அல்லது**<br>அரசாங்கத்தால்<br>**அல்லது** மூன்றாம் நிலை **மற்றும்** தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட தொழிநுட்ப அல்லது தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் மூன்று(03) வருட முழுநேரப் பாடநெறி சான்றிதழ் அல்லது அதற்குச் சமனான சான்றிதழ் அல்லது தொழில் சார் நான்காம்(04) மட்டத்தின் தேசிய தொழில் தகைமை சான்றிதழ் (NVQ 4)<br>**அத்துடன்**<br><br>அனுபவம்<br>அரச **அல்லது** அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த துறையில் சமனான பதவியொன்றில் மூன்று(03) வருட அனுபவம். | ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர் ஒரு வருட காலத்தினுள் தீயணைத்தல் மற்றும் தீத்தடுத்தல், பொதுவான பாதுகாப்பு முதலுதவி, தனிநபர் பாதுகாப்பு நுட்ப முறைகள், கடல் சார் ஆங்கிலம் **மற்றும்** வேலைத் தளத்தின் சுகாதாரம் **மற்றும்** பாதுகாப்பு தொடர்பான பாடநெறிகளை பின்பற்றி சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.<br>**குறிப்பு**<br>1. இழுவைக் கலம் **அல்லது** சேறுவாரிக் கலங்களில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் செயற்பாடு **மற்றும்** அவற்றின் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக சிறந்த அறிவிருத்தல் வேண்டும்.<br>2. நியம கடல் சார் முடிச்சு முறைகள் தொடர்பான அறிவு, கலமொன்றினை கட்டி வைத்தல் தொடர்பான அறிவு **மற்றும்** படகு செலுத்தும் ஆற்றல் இருத்தல் வேண்டும். | 7:3 (T3)<br>அடிப்படைச் சம்பள முனை<br>ரூ. 46,665/-<br>வருடாந்த சம்பள ஏற்றம்:<br>ரூ. 1005/-<br>(மொத்தச் சம்பளம் மாதாந்தம் ரூ.121,000 அளவினதாக இருக்கும்) | சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய நேர்முக மற்றும் செயன்முறை பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். | வயது 18-45 இற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். (அரச சேவையின் விண்ணப்பதாரிகள் தொடர்பில் இவ் வயதெல்லை ஏற்புடையதல்ல.) |

**ஏனையவை**

**சகல விண்ணப்பதாரிகளும்,**

1. பதவி தொடர்பில் ஒப்படைக்கப்படும் பணிகளை சிறப்பாக நிறைவேற்றுதல் போலவே நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு அவசியமான உடல், உள தகுதியினையுடையவராக இருத்தல் வேண்டும்.
2. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
3. நேர்முகக் குழுவின் தீர்மானத்தின் படி அல்லது பதவிக்கு அவசியமாயின் மருத்துவப் பரிசோதனையொன்றில் சித்தியடைதல் வேண்டும்.
4. இப் பதவி நிரந்தரப் பதவியொன்றாவதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு உரித்துடையதாகும்.
5. அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்கள / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலே பதவிகளுக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்களம் / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**கவனிக்க:**

2016.12.01 ஆம் திகதிய அரச நிருவாக அமைச்சினால் வெளியிடப்பட்ட 28/2016 சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மேலே ஆட்சேர்க்கும் நடைமுறைகளில் தொழிநுட்ப மற்றும் தொழிற் பிரிவுகளின் பதவிகளுக்கு ஆட்சேர்க்கையில் தொழிற் தகைமையாக NVQ 3 அல்லது NVQ 4 உடன் கல்வித் தகைமையாக க.பொ.த(சா.தரம்) அல்லது க.பொ.த(உ.தரம்) சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் NVQ 3 மற்றும் NVQ 4 தகைமைகள் பெற்றிருத்தல் முறையே க.பொ.த(சா.தரம்) மற்றும் க.பொ.த(உ.தரம்) பரீட்சையில் சித்தியடைதலுக்கு சமனானதெனக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பூரண சுயவிபரங்கள் உள்ளடங்கிய பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், ஏனைய உரிய கல்வி மற்றும் தொழிற் தகைமை சான்றிதழ்கள், சேவைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் உறவினரல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பதிவுத் தபாலில் 2026.07.17 ஆம் திகதிக்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தபாலில் காணாமல் போகும் அல்லது தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபை பொறுப்பேற்கமாட்டாது. குறித்த விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் தினத்திற்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பிரதான முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்),**
**மனிதவளம் மற்றும் நிருவாகப் பகுதி,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**கொச்சிக்கடை, கொழும்பு 13.**